யிருந்தது. 1967-க்கு முன்னால் அது 'ஷூட் டு கில்' என்ற அளவில் மாற்றியமைக்கப்பட்டதே, இப்போது ஏதாவது மாற்றியமைப்ப தற்கான எண்ணம் அரசுக்கு இருக்கிறதா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, சொல் அப்படி இருந்தாலும் பயன்படுத்துகிற முறைகள் கூடுமான வரையில் மனிதாபிமான உணர்ச்சியுள்ள முறையில் இருக்க வேண்டுமென்று இந்த அரசு விரும்பி, அந்த நிலையில் நடைபெற்று வருகிறது.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: தலைவர் அவர்களே, துப்பாக்கிச்சூட்டினால் உயிர் இழந்தவர்களுக்கு நஷ்ட ஈடு ஏதாவது கொடுத்திருக்கிறதா? அதுமாதிரி ஊனமடைந்தவர்களுக்கும் நஷ்ட ஈடு கொடுத்திருக்கிறதா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, துப்பாக்கிச் சூட்டினால் குருசாமி முதலியார் என்கிற ஒருவர் மரணமடைந்தார். அவருடைய மனைவிக்கு முதலமைச்சர் பொதுநல நிதியிலிருந்து இரண்டாயிரம் ரூபாய் வழங்கப்பட்டது.

திரு. எம். சுரேந்திரன்: தலைவர் அவர்களே, துப்பாக்கிப் பிரயோகங்கள் சில சந்தர்ப்பங்களில் தேவைப்பட்டோ, தேவையில்லாமலோ நடந்துவிடுகின்றன. ஒவ்வொரு துப்பாக்கிப் பிரயோகம் நடக்கும்போதும் அது சரியானதா, அல்லவா என்பதைப் பொதுமக்கள் தெரிந்துகொள்வதற்காக நீதி விசாரணையை ஏற்படுத்துவதற்கு அரசாங்கம் முன்வருமா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, இந்த அரசாங்கத்தைப் பொறுத்தவரையில் துப்பாக்கிப் பிரயோகங்களில் நீதிவிசாரணை நடத்துவதற்கு ஒவ்வொரு தடவையும் வழிவகை செய்திருக்கிறது. தென்காசி துப்பாக்கிப் பிரயோகத்திலும் நீதி விசாரணை நடத்தப்பட்டு அறிக்கையும் சபைமுன் வைக்கப்படும் என்று சொல்லியிருக்கிறேன்.

கோணிப் பைகள் தொழில்

*287. வினா—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடை யளிப்பாரா—

தமிழ்நாட்டில் தற்போது கோணிப்பைகள் செய்யும் தொழிற் சாலைகள் நிறுவிட ஏதேனும் திட்டம் அரசு பரிசீலனையிலுள்ளதா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: இல்லை.

1971 ஜூலை 17]

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, கல்கத்தாவிலிருந்து தமிழ்நாட்டிற்கு கோணிப்பைகள் வருவது குறைந்துவிட்டதால், நமக்குத் தேவையான கோணிப்பைகளுக்காகத் தேவையான சணல் பயிரிட இந்த அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தலைவர் அவர்களே, இதுபற்றி வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களைக் கேட்க வேண்டும்.

Spinning Mill in Hosur Taluk.

*288 *Q.*—THIRU B. VENKATASWAMY : Will the Hon. the Minister for Industries be pleased to state :

(*a*) whether there is any proposal to start a spinning mill in Hosur Taluk; and

(*b*) if so, when it will be started ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் :

(அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

THIRU B. VENKATASWAMY : Sir is, it not a fact that a spinning mill was sanctioned to Hosur a few years ago but it was started in Salem and not in Hosur. As Hosur is having an ideal climate for a spinning mill and cheap labour also is available there, will this Government come forward to open a spinning mill at Hosur ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தலைவர் அவர்களே, இது மத்திய அரசின் கொள்கையைப் பொறுத்துள்ளது. இனிமேல் ஸ்பின்னிங் மில்கள் அதிகமாக ஏற்படுத்தக்கூடாது என்று மத்திய அரசினர் முடிவு எடுத்திருக்கிறார்கள். அவர்கள் அனுமதித்தால் இது செய்யப்படும்.

Production of Glass Bangles.

* 289 *Q.*—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Industries be pleased to state whether there are proposals under the consideration of the Government now to offer financial assistance to the Glass Bangle Industry ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இல்லை.

திரு. என். டென்னிஸ் : தலைவர் அவர்களே, பிளாஸ்டிக் வளையல்கள் அதிகமாக வந்துவிட்டதன் காரணமாக கண்ணாடி வளையல்கள் உற்பத்தி பாதிக்கப்படுவதால், கண்ணாடி வளையல் உற்பத்திக்குப் பாதுகாப்பு அளிக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தலைவர் அவர்களே, புதிதாக உற்பத்தி செய்வதற்கு உதவி தேவைப்பட்டால், 'சிட்கோ' நிறுவனத்திற்கு மனுப்போட்டால் பரிசீலிப்பார்கள்.